# சிலம்பில் மனிதநேயம்

*முனைவர் கா. சரவணபாண்டி*
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5016

## முன்னுரை

மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்ததாகும். இவ்வாழ்க்கையை மனிதன் சரியாக அமைத்துக் கொள்வதற்கு மனிதநேயம் மிகவும் அவசியமானதாகும். இன்றைய மனிதனின் வாழ்வியல் மனித நேயங்களை மறந்து மனம் போன போக்கில் வாழும் நிலையைக் காண முடிகிறது. நாகரிக வளர்ச்சியில் மனிதம் மறந்து மானிடர் வாழும் அவல நிலையைக் களைந்து நல்வாழ்விற்கு வழிகாட்டும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் மனிதநேயப் பண்புகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு காரணமாக உருவான கதையாதலால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவதாகும். இன்பியலும், துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். சிலம்பில் தமிழரின் ஒன்றுகலந்து வாழும் பண்பு, தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள் போன்றவை ஒளி யிட்டு மிளிர்கின்றன.

மனிதநேயம்

மனிதர்களுக்குரிய உயரியப் பண்புகளில் ஒன்று மனிதநேயம். மனித இனத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக்காட்டுவது மனித நேயமாகும். ஒரு உயிரின் மீது வைக்கும் அன்பு, பாசம், பக்தி, கருணை, இரக்கம், நட்பு, காதல்,நேயம், ஜீவகாருண்யம் போன்றவையெல்லாம் மனிதநேயமாகும். இயலாமையால் வருந்தும் பிறரின் துன்பத்தைப் போக்குவதற்கு இரக்க குணத்துடனும், இளகிய மனத்துடனும் செயல்புரிவதே மனிதநேயம்.

**“அரம் போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்” *(குறள் 997)***

மனித நேயம் மற்றவர்களை மக்கட்பண்பு இல்லாதவர் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மனிதநேயப் பண்புகள் பிறரிடம் கொடுக்கக் கொடுக்க குறையாது வளரும் தன்மையுடையதாகும்.

**கருணை மறவன்**

கோவலன்மாதவி மகள்மணிமேகலைக்கு பெயர் சூட்டும் விழாவின் போது வயது முதிர்ந்த மறையோன் கோவலனிடம் தானம் பெறுவதற்காக தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தான். மறையோனைப் பாகர்க்கும் அடங்காத யானையொன்று சினத்துடன் தும்பிக்கையால் பற்றியது. இதனைக் கண்ட கோவலன் தன் கருணையுள்ளத்தினால் விரைந்து சென்ற யானையை அடக்கி மறையோனைக் காப்பாற்றினான்.

**"மைஇருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்**
**பிடர்த்தலை இருந்து, பெருஞ்சினம் பிறழாக்**
**கடக்களிறு அடக்கிய கருணை மறவர்"**
***(சிலம்பு. 14:51 -53)***

உயிர்களிடம் கொண்ட இரக்கம் காரணமாக யானையைக் கொல்லாமல் விட்டு தனது கருணை உள்ளத்தினையும், மறப் பண்பினையும் கோவலன் வெளிப்படுத்தியுள்ளான்.

**வறியவருக்கு உதவுதல்**

பத்தினி ஒருத்தியின் கணவனிடம் சென்று, அவன் மனைவி பழிச்சொற்களை அடையுமாறு பொய்ம்மை கூறினான் வறியவன் ஒருவன். பொய் சொல்லும் கீழ் மகன்களை உண்ணும் புதம் வறியவனை அறைந்துக் கொன்றது. அவனை இழந்து வருந்திய அவன் தாய், மனைவி மற்றும் சுற்றத்தார் முதலியோருக்கும் சொந்த உறவினைப் போலப் பொருளுதவி செய்து, அவர்களுடைய பசித் துன்பத்தினைப் போக்கி பல ஆண்டுகள் காத்த உயர்குணச் செம்மல் கோவலன் ஆவான்.

**"சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்**
**பற்றிய இளைஞரின பசிப்பிணி அறுத்துப்**
**பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்"**
***(சிலம்பு.15:88-90)***

கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசியினைப் போக்குபவரே உண்மையான மனித நேயம் உடையவராவார் என்பதை சிலப்பதிகாரம் கோவலன் வழியாக விளக்கியுள்ளது.

**இரக்க உணர்வு**

இரக்கம் என்பது பிறரது நிலையைக் கண்டு மனதில் ஏற்படக் கூடிய ஒருவித உணர்ச்சி மாற்றமாகும். கண்ணகி பிறரது நலனில் அக்கறை கொண்டவளாகத் திகழ்ந்துள்ளாள். பரத்தையர் தன்னை எள்ளி நகையாடிய போது கவுந்தியடிகள் முட்கள் நிறைந்த காட்டில் முது நரியாகும் படி வழங்கிய சாபத்தை நீக்கும் பொருட்டு அவர்கள் மீது இரக்கம் கொண்டுள்ளாள்.

**"நெறியின் நீங்கியோர் நீர் அல கூறினும்**
**அறியா மைஎன்று அறியல் வேண்டும்"**
***(சிலம்பு.10: 236,237)***

பிறருக்கு எவ்வித இடையுறும் ஏற்படக் கூடாது என்ற இரக்கக்குணம் பெற்றவளாகக் கண்ணகி திகழ்ந்துள்ளாள்.

**தேவந்தியின் நட்பு**

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உலகில் இருக்கும் ஒரே உறவு நட்பாகும். தேவந்தி கண்ணகியின் தோழியாவாள். பார்ப்பனப் பெண்ணான தேவந்தி பாசண்ட சாத்தனின் மனைவியாவாள். தேவந்தி பிரிந்து போன தனது கணவன் மீண்டும் தன்னுடன் இணைவதற்காக புனித நீராடல் செய்யும்போது, கோவலனைப் பிரிந்த தோழி கண்ணகியின் துன்ப நிலையை யெண்ணி வருந்தி, கண்ணகியிருக்குமிடம் சென்று ஆறுதல் கூறியுள்ளாள். உடலில் இருந்து உடை விலக அதை தடுத்துக்காக்கும் கை போன்று நண்பனுக்கு துன்பம் வரும் போது உடனே சென்று போக்குவதே நல்ல நட்பு என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**
***(குறள். 788)***

சேரன் செங்குட்டுபனிடம் சென்று தேவந்தி தன்னை அறிமுகப்படுத்தும் போது கண்ணகியின் பெருமைக் கூறி, அவளுடையத் தோழி என்று கூறியுள்ளாாள்.

*"முடிமன்னர் மூவரும் காத்துஓம்பும் தெய்வ*
*வடபேர் இமய மலையிற் பிறந்து*
*கடுவிரல் கங்கைப் புனல்சூடிப் போந்த*
*தொகுவளைத் தோழிக்குத் தோழிநான் கண்டீர்*
*சோனாட்டார் பாவைக்குத் தோழிநான்*
*கண்டீர்" (சிலம்பு.29:2)*

### பாண்டியர்களின் பண்புள்ளம்

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் அறநெறி தவறாமலும், நாட்டு மக்களுக்கு எவ்வித துன்பமும் தராமல் செங்கோலாட்சி செய்துள்ளான். மதுராபுரி என்னும் குலதெய்வம் கோவலன் இறந்த துயரத்திலிருந்த கண்ணகியிடம், பாண்டிய மன்னன் அந்தணர் ஓதும் மறையொலியன்றி ஆராய்ச்சி மணியின் ஓசையினை கேட்டறியாதவன் பகை மன்னரைத் தவிர, குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலன் இல்லை என்று கூறியுள்ளாள்.

*"மறைநா ஓசை அல்லது யாவதும்*
*மணிநா ஓசை கேட்டதும் இலனே*
*அடிதொழுது இறைஞ்சா மன்னர் அல்லது*
*குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்"*
*(சிலம்பு.23: 31-34)*

இதன் மூலம் பாண்டிய மன்னன் மக்களை மதிக்கின்ற உயர்ந்த பண்பினை உடையவர் என்பது தெளி வாகிறது.

### கண்ணகியின் தாய்மையுள்ளம்

கோவலன் கொலை செய்யப்பட்டதும் கண்ணகி மதுரை நகரினை அழிக்க தீக்கடவுளை ஏவினாள். பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் ஆகியோரை விடுத்து தீயக்குணம் உடையோரை அழிக்கும்படி கூறியதன் மூலம் கண்ணகியின் தாய்மை குணம் வெளிப்பட்டுள்ளது.

*"பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப்*
*பெண்டிர்,*
*மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்க"*
*(சிலம்பு.21: 53-55)*

### கவுந்தியடிகள் வடக்கிருத்தல்

வடக்குப் பக்கமாக அமர்ந்து உணவு உண்ணாமலிருந்து இறப்பது வடக்கிருத்தலாகும். பொறுக்கமுடியாத மனவேதனையைத் தருகின்ற போது வடக்கிருந்து உயிர் விடலாம் என்பது சமணக் கொள்கையாகும். கவுந்தியடிகள் சமண பெண் துறவியாரார். கோவலன் கண்ணகி மதுரைக்கு செல்லும் போது வழித்துணையாக சென்றவர். இருவர் மீதும் மாறாப் பற்று வைத்திருந்த கவுந்தியடிகள் அவர்களின் பிரிவினால் மனத்துயர் அடைந்து, வடக்கிருந்து தன்னுயிரை துறந்துள்ளார்.

*"தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்*
*நிவந்தோங்கு செங்கோல் நீனில வேந்தன்.*
*உண்ணா நோன்போடு உயர்பதிப் பெயர்த்தலும்"*
*(சிலம்பு.27: 79-83)*

### முடிவுரை

மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுவது மனித நேயப் பண்பாகும். உலகில் வாழும் எல்லா உயிர்களிடமும் அன்பு, இரக்கம், நட்பு, உதவி செய்தல் போன்ற பண்புகளை வெளி ப்படுத்த வேண்டும் என்பதை சிலப்பதிகாரம் தெளி வுபடுத்தியுள்ளது. நவீன உலகில் மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் மாறிவிட்டன. வீட்டிற்கு வீடு பெரிய சுவர்களைக் கட்டி மற்றவர்களுக்கு நேருவது என்னவென்று தெரியாமல் வாழ்கின்ற இந்தகாலச் சூழலில், மனிதநேயப்பண்பான ஒருவருக்கொருவர் உதவிச் செய்து வாழும் முறைகள் மேலும் வளர வேண்டும்.

### மேற்பார்வை நூல்கள்


1. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், 2014.
2. பாரதியார் உரை, திருக்குறள், தமிழ் மண் பதிப்பகம், 2009
3. செ. அஜிதா, நவீன உலகிற்கு வழிகாட்டும் அற இலக்கியங்கள், ஸ்மார்ட் பதிப்பகம், 2015